Jaffna University International

Research Conference - 2014

" Accelerated Regional Development "

JUICE
2014

# CONFERENCE PROCEEDINGS

Edited by:
Abyerami Sivaruban
Kanthasamy Kajavinthan

December 18-19, 2014

University of Jaffna, Sri Lanka

Jaffna University International Research Conference 2014 (JUICE - 2014)
ISSN No: 2279 - 1922

**Manuscripts**

| | |
|---|---|
| Received upto | : 10th August, 2014 |
| Notification of acceptance | : 15th September, 2014 |
| Acceptance of revised papers | : 10th November, 2014 |
| Published | : 18th December, 2014 |

**Editorial Board**

| | |
|---|---|
| Editor-in-Chief | : Prof. G. Mikunthan and Dr. K. Suthakar |
| Editors | : Dr. (Mrs) A. Sivaruban and Dr. K. Kajavinthan |

**Person-in-Charge of the tracks**

| | |
|---|---|
| Dr. K. Sooriyakumar | - Agriculture |
| Dr. T. Ketheesan | - Applied Sciences and Technology |
| Mrs. S.M. Alocious | - Commerce and Management |
| Dr. (Mrs) A. Sathiyaseelan | - Education |
| Dr. T. Mangaleswaran | - Entrepreneurship |
| Prof. (Mrs) S. Kuganathan | - Fisheries Science |
| Dr. S. Vasantharuba | - Food and Nutrition |
| Dr. N. Surendrakumaran | - Health and Medical Sciences |
| Mr. E. Cumaran | - Humanities and Fine Arts |
| Mr. K. Sarveswaran | - Information Sciences and Technology |
| Prof (Mrs) M. Senthilnanthanan | - Pure Science |
| Dr. S. Vijayakumar | - Regional Science |
| Dr. S. Santhirasegaram | - Social Sciences |

**Cover page Design** : Mr. S. Shriparen and Mr. K. Sarveswaran

**Disclaimer**

The full papers published in this proceeding are the views expressed by the respective authors. The statements and opinions stated in these publications do not necessarily reflect the views of the editorial Board of the Jaffna University International Research Conference-2014.

© JUICE 2014,University of Jaffna, Sri Lanka.

URL : www.jfn.ac.lk/juice2014
Printed by : **"Andra Printers",** No.356A, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 221 7279

# அறிவாராய்ச்சியியலில் உடன் பிறந்த எண்ணங்களுக்கான மறுப்புரை

## (ஜோன் லொக்கின் மனித அறிவு பற்றிய கட்டுரையை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு)

பொ.பூலோகநாதன்
ponnuthurainathan1985@gmail.com.

**ஆய்வுச் சுருக்கம்**

மெய்யியலில் முதன்மைக்குரிய பகுதிகளில் ஒன்றாக அறிவாராய்ச்சியியல் அமைந்துள்ளது. இது ஆங்கிலத்தில் Epistemology என அழைக்கப்படுகிறது. Episteme என்பது அறிவையும் Logos என்பது முறையான ஆராய்ச்சி எனவும் பொருள் கொள்ளப்பட்டு அறிவு பற்றிய முறையான ஆராய்ச்சி அறிவாராய்ச்சியியல் என அழைக்கப்படுகிறது. இவ்வாய்வுத் துறையானது அறிவென்றால் என்ன? நாம் எவ்வாறு இவ்வறிவினைப் பெறுகின்றோம்? அறிவிற்கும் அபிப்பிராயத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன? நிச்சயமான அறிவினைப் பெறுதல் சாத்தியமா? எனும் மேற்படி வினாக்களுக்கு விடைதேடுமோர் ஆய்வுத் துறையாக அறிவாராய்ச்சியியலைக் குறிப்பிடலாம். அறிவாராய்ச்சியியல் தொடர்பான பிரச்சினைகள் ஆதி கிரேக்கத்திலிருந்து தோற்றம் பெற்றிருப்பினும் இது தொடர்பான தீவிர ஆராய்ச்சிகள் நவீன காலத்திலேயே இடம்பெற்றன. குறிப்பாக, இக்காலத்தில் தோன்றிய அறிவு முதல்வாதிகள், அனுபவமுதல்வாதிகள், கான்ட் போன்றோர்களின் ஆய்வில் அறிவு பற்றிய ஆராய்ச்சி சிறப்பிடம் பெறுகிறது. அறிவுமுதல் வாதிகளான டேக்காட், ஸ்பினோஸா, லைப்னிஸ்ட் போன்றோர் அறிவு உடன் பிறந்ததாக எமது உள்ளத்தில் காணப்படுகிறது எனவும் அது நியாயத்தினால் விருத்தி செய்யப்படுகிறது எனவும் குறிப்பிட்டனர். நியாயவாதிகளின் இக்கருத்தினை ஏற்காத அனுபவவாதிகளான ஜோன் லொக், பார்க்ளி, டேவிட் கியூம் போன்றோர் நியாயவாதிகளின் கருத்தினை மறுத்து அதாவது உடன் பிறந்த எண்ணங்கள் உண்டு என்பதை மறுத்து அனுபவத்தினூடாகவே அதாவது புலனுணர்வினூடாகவே நாம் நிச்சயமான அறிவினை பெற முடியும் எனும் கருத்தினை முன்வைத்தனர்.

இதில் குறிப்பாக அனுபவமுதல்வாதியாகிய ஜோன் லொக் தனது நூலான மனித அறிவு பற்றிய கட்டுரையில் Essay concerning human understanding உடன் பிறந்த எண்ணங்கள் உண்டு என்பதை முற்றாக மறுத்துரைத்து அறிவினைப் பெறுவதில் அனுபவத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தியமையைக் காணலாம். இவ்வாய்வினை நேர்த்தியான துறை யில் வடிவமைப்பதற்கு பல ஆய்வுமுறையியல்கள் பயன் படுத்தப்படுகின்றன. குறிப்பாக பகுப்பாய்வு முறையியல், விபரண முறையியல் என்பன பயன்படுத்தப்படுவதோடு இவ்வாய்வுக்குரிய தகவல்கள் யாவும் இலக்கிய ஆய்வுகள் மூலமே பெறப்படுகிறது. இவ்வாய்வு சார்ந்த மூலநூல்கள், உரை நூல்கள், விளக்கநூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள் என்ப வற்றோடு இணையத்தள தகவல்கள் என்பனவற்றிலிருந்தும் தரவுகள் பெறப்பட்டு இவ்வாய்வு சரியான முறை யில் வடிவமைக்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்** – உடன் பிறந்த எண்ணங்கள், அறிவு முதல்வாதம், அனுபவமுதல்வாதம், அறிவாராய்ச்சியியல், நியாயித்தல்.

## 1. ஆய்வு அறிமுகம்

மெய்யியலின் முதன்மைக்குரிய பகுதிகளில் ஒன்றாக அறிவாராய்ச்சியியல் விளங்குகின்றது. இது ஆங்கிலத்தில் Epistemology என அழைக்கப்படுகிறது. Episteme என்பது அறிவையும் Logos என்பது முறைமை எனவும் பொருள் கொள்ளப்பட்டு அறிவு பற்றிய முறையான ஆரா ய்ச்சி அறிவாராய்ச்சியியல் என அழைக்கப்படுகிறது.[1] இவ்வாய்வுத் துறையானது அறிவென்றால் என்ன? நாம் எவ்வாறு அறிவினைப் பெறுகின்றோம்? அறிவிற்கும் அபிப்பிராயத்திற்குமிடையிலான வேறுபாடு என்ன? நிச்சயமான அறிவினைப் பெறுதல் சாத்தியமா? எனும் வினாக்களுக்கு விடை தேடுமோர் ஆய்வுத்துறையாக குறிப்பிடலாம். அறிவும் அதன் சாத்தியப்பாடு குறித்ததுமான பிரச்சினைகள் கிரேக்க காலத்திலேயே தோற்றம் பெற்றன. சோக்கிரட்டீசுக்கு முற்பட்ட மெய்யியலாளர்கள் அறி வாராய்ச்சியியல் குறித்து அதிக அக்கறை காட்டவில்லை.